செய்தி வெளியீடு எண்:1018 நாள்:22.11.2008

<u>செய்தி வெளியீடு – 22.11.2008</u>

# அருந்ததியருக்கு தனி இட ஒதுக்கீடு குறித்த அறிக்கை முதலமைச்சர் கலைஞர் அவர்களிடம் நீதியரசர் எம்.எஸ்.ஜனார்த்தனம் வழங்கினார்.

**கடந்த 12.03.2008 அன்று நடைபெற்ற அனைத்துக்கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் அருந்ததியருக்கு தனி இட ஒதுக்கீடு வழங்குவது குறித்து வழங்கப்பட்ட ஆலோசனையின்படி பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையம் ஆய்வு செய்து தமிழக அரசு வேலைவாய்ப்புகளிலும், கல்வி நிறுவனங்களிலும் அருந்ததியருக்கு தனி இட ஒதுக்கீடு வழங்குவது குறித்து தயாரிக்கப்பட்டுள்ள அறிக்கையை ஓய்வுபெற்ற நீதியரசர் எம்.எஸ்.ஜனார்த்தனம் இன்று (22.11.2008) முதலமைச்சர் கலைஞர் அவர்களிடம் வழங்கினார். ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறைச் செயலாளர் திரு.வி. கனகராஜ், இ.ஆ.ப. உடனிருந்தார்.**

* * * * * *

வெளியீடு:இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9